# கிருஷ்ணகிரியில் ஆச்சாரியார் திணறல்.

## ஹிந்தி எதிர்ப்பாளர் ஆர்ப்பாட்டம்.

### கறுப்புக்கொடி வரவேற்பு.

## ஆச்சாரியார்-விசுவநாதம் வாக்குவாதம்.

### பொதுக்கூட்டத்தில் தலைவர்கள் பேச்சு.

கிருஷ்ணகிரி, ஜூன். 6.

முதன் மந்திரி கனம் ஆச்சாரியார் இவ்வூருக்கு வருவதை அறிந்த தலவுரிமைச் சங்கத்தார் ஹிந்தி பகிஷ்கார ஊர்வலமும் ஹிந்தி கண்டிப்பு பொதுக் கூட்டமும் ஏற்பாடு செய்து தோழர் ஈ. வெ. ராமசாமியும், கே. ஏ. பி. விஸ்வநாதமும் உடனேவரும்படி சென்னைக்குத் தந்தி அனுப்பினார்கள். இதை அறிந்த காங்கரஸ்காரர் கலக்டர் முதலியவர்களுக்கு பல தந்திகள் கொடுத்தனர். அதற்கிணங்க கிருஷ்ணகிரிக்கு ரிசர்வ் போலீஸ் படை வந்து சேர்ந்தது.

தலவுரிமைச் சங்கத்தார் அழைப்பிற் கிணங்கி தோழர் கே. ஏ. பி. விசுவநாதம் இன்று காலை கிருஷ்ணகிரி வந்து சேர்ந்தார். ஸ்டேஷனில் தோழர் கே. ஏ. பி. விஸ்வநாதனை கிருஷ்ணகிரி தாலுக்கா பிரமுகர்கள் பாண்டு வாத்தியங்களுடன் மாலை சூட்டி வரவேற்றனர்.

ஊர் முழுதும் போலீஸ் கண்காணிப்பையும் ரிசர்வ் போலீஸ் படையின் வருகையையும் அறிந்து ஜனங்கள் மிகவும் பரபரப்பாய் என்ன சம்பவிக்குமோ என்று பீதியாய் இருந்தார்கள்.

மாலை 4 மணிக்குப் பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியார் தாலுக்காபீசிற்கு வருகிறார் என்று தெரிந்தவுடனே தோழர்கள் கே. ஏ. பி. விஸ்வநாதம், டி. கிருஷ்ணமூர்த்தி, எம். என். கஞ்சா செட்டி, கே. எஸ். ஆர். அமீனுதீன் சாயபு, கே. ஈ. முனுசாமிக்கவுண்டர் ஆகியவர்களின் தலைமையின் கீழ் நூற்றுக்கணக்கான கறுப்புக் கொடிகள் தாங்கிய வீர தமிழர்களின் ஹிந்தி பகிஷ்கார ஊர்வலம் தவுலதாபாத்திலிருந்து தாலுக்காபீசிற்கு ஆயிரக்கணக்கான ஹிந்தி எதிர்ப்பாளர்கள் புடை சூழ "ஹிந்தி வீழ்க" "தமிழ் வாழ்க" "ஆச்சாரியாரே திரும்பிப்போம்" என கோஷங்கள் செய்துகொண்டு முதன் மந்திரியை சந்திக்க தாலுக்காபீசிற்குச் சென்றனர், அங்கு போலீஸ் படை அணிவகுத்து நின்றனர். ரிசர்வ் போலீஸ் படை தாலுக்காபீசிற்குள் இருந்தது. ஹிந்தி எதிர்ப்பாளர்களும், தொண்டர்களும், தலைவர்களும் சரியானபடி அணிவகுத்து நின்ற காட்சி ஜில்லா கலெக்டருக்கும் போலீஸ் படைகளுக்கும் எவ்வித வேலையும் கொடுக்காமலிருந்தது. சரியாக 4 மணிக்கு ஆச்சாரியார் வந்து கொண்டிருந்தார் ஹிந்தி எதிர்ப்பாளர் வெறுப்புக் கோஷம் ஆகாசத்தை பிளக்க கறுப்புக் கொடிகள் வீச "ஹிந்தி வீழ்க" என்று சொல்லுகையில் தாலுக்காபீசிற்குள் சென்றார்.

உள்ளே சென்ற ஆச்சாரியார் மதுவிலக்குக் கமிட்டியாரிடம் யாதொன்றும் பேசமுடியாமல் ஹிந்தி எதிர்ப்பின் கோஷத்தில் திணறிப்போய் மறுபடியும் எழுந்து வந்து தோழர் கே. ஏ. பி. விசுவநாதனிடம், "உங்கள் வெறுப்பைக் காட்டிவிட்டீர்கள். இனிபோய் விடுங்கள்" என்றார்

கே. ஏ. பி. வி.:— "எங்கள் தலைவர்களை அரஸ்டு செய்திருக்கும் பொழுது நாங்கள் எப்படிச் சும்மா இருக்க முடியும் என்றார்"

ஆச்சாரியார்:— "ஆம். இன்னும் பலர் அரஸ்டு செய்யப்படுவார்கள்"

கே. ஏ. பி. வி.:— "அதற்குத் தயாராகவே நாங்களும் வந்திருக்கின்றோம்"

உடனே ஜனங்கள் "ஜெயிலுக்குப்போகவும் உயிர்விடவும் தயார்" என்று முழக்கம் செய்தார்கள்.

எதிர்பாராத இச்சொற்களைக் கேட்ட ஆச்சாரியார் திடுக்கிட்டுப்போய் "நீங்கள் விலகிப்போக மாட்டீர்களா" என்றார்.

கே. ஏ. பி. வி:— "அது எங்கள் இஷ்டம். நீங்கள் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக வைப்பதில்லை என்று கூறினால் திரும்பிப்போகிறோம்"

ஆச்சாரியார்:— "அது வேறு விஷயம். நான் அதைப்பற்றிப் பேசவரவில்லை. என் பேச்சைக் கேட்டு விலகிப்போங்கள் என்றார்"

கே. ஏ. பி. வி.:— "எங்கள் பேச்சை நீங்கள் கேட்காவிட்டால் உங்கள் பேச்சை நாங்கள் கேட்க அவசியமில்லை.

ஆச்சாரியார் வேறு பேச வழியில்லாமல் ஜனங்களைப் பார்த்து, "என் பேச்சை இவர் கேட்கமாட்டேன் என்கிறார். மற்றவர்களுக்குச் சொல்லுகிறேன். என்னுடைய பேச்சைக் கேட்டு விலகிப் போகிறீர்களா இல்லையா?" என்று கேட்டார்.

ஜனங்கள்:- "மாட்டோம். மாட்டோம். அவர்தான் எங்கள் தலைவர்."

தோழர் கிருஷ்ணமூர்த்தி:— "ஸ்டாலின் ஜெகதீஸின் உயிர் நிமிஷக் கணக்கில் இருக்கிறது. அவர் காப்பாற்றப்பட வேண்டும்." என்று ஆச்சாரியாரை நோக்கிக் கூறினார்.

ஆச்சாரியார்:— "நீங்கள்தான் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்." ஜனங்கள் (திருப்தியடையாமல்) ஒரே முகமாக "ஆச்சாரியாரே திரும்பிப் போம்" என்று இடி முழக்கம் செய்தனர். வேறொன்றும் செய்ய வழியில்லாமல் ஆச்சாரியார் திரும்புகையில் சுமார் 75 வயதுள்ள பெரியோர் இராஜகோபாலாச்சாரியை நோக்கி, "கல்லும் கரையுமே உம் மனம் கரையவில்லையே" என்று திடு திடுக்கச் சொன்னார். ஆச்சாரியார் உள்ளே திரும்பிப் போய்விட்டார். இதன் பின் கனம் இராமநாதனும் கே. ஏ. பி. வி. யும் சந்தித்து பேசிக்கொண்டிருந்தனர். கலக்டர், சப்கலக்டர் போலீஸ் படை முதலியோர் இக்காக்ஷிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின் ஹிந்தி எதிர்ப்பாளர்கள் தங்கள் கோஷங்களைப் பன்முறை சொல்லி சகலருக்கும் ஹிந்தியின் வெறுப்பை அறியும்படி செய்து கறுப்புக்கொடி ஊர்வலத்துடன் ஸ்டாலின் ஜெகதீசனுக்குஜே' 'பல்லடம் பொன்னுசாமிக்குஜே' "ஹிந்தி வீழ்க" "தமிழ்வாழ்க" என்ற முழக்கத்துடன் தருமராஜா கோவில் மைதானத்தில் கூட்டப்பட்டிருந்த பொதுக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தனர். தோழர் டி. கிருஷ்ண மூர்த்தி தலைமை வகித்தார். கூட்டத்தில் சுமார் 2000-பேர் கூடியிருந்தனர் தோழர் மஹம்மத் காசிம்சாகிபு, எம். என். கஞ்சா செட்டியார் முதலியவர்கள் ஹிந்தியின் கெடுதல்களைப் பற்றிப் பேசினர். தோழர் கே. ஏ. பி. விஸ்வநாதம் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றியும், கட்டாய ஹிந்தியினால் ஏற்படும் வீழ்ச்சியைப் பற்றியும்" சுமார் 1½ மணி நேரம் பேசினர் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. மறுபடியும் ஊர்வலம் ஆரம்பித்த இடத்திற்கே வந்து சேர்ந்தது.

இன்று இரவு தனியாக கூட்டப்பட்டிருந்த காங்கரஸ் கூட்டத்தில் தோழர் ஆச்சாரியார் தான் இது வரையில் காணாத மும்முரமான ஹிந்தி எதிர்ப்பை கிருஷ்ணகிரியில் பார்த்ததாகவும் அதனால் தான் ஹிந்தியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லுவதாக் கூறி தன் அபிப்ராயத்தில் ஹிந்தியினால் தமிழுக்கு ஆபத்து ஒன்றும் நேரிடாதென்றும், டென்மார்க் தேசத்தில் ஐந்து பாஷைகளைக் கற்பிக்கிறார்களென்றும், தன்னை நம்பவேண்டும் என்றும் கூறி முடித்து இந்த ஜில்லாவில் கள்ளுக்குடிக்கும் நிபந்தனையை மாற்றுவதற்கு பிராமண சாஸ்திரிகளை அழைத்து அவருக்கு 2 ரூபாய் தக்ஷிணை கொடுத்து ஆங்காங்கே காலக்ஷேபம் செய்யச் செய்வது கிராமவாசிகளுக்கு நல்லதென்றும் கூறினார்.

சென்னை மாகாணம் ஹிந்தியால் கொதித்துக் கொண்டிருக்கும் இந்நிலையில் பிரதம மந்திரியார் தமாஷ் பேச்சுக்களை பேசிக்கொண்டு காலங்கழிப்பதைக் கிருஷ்ணகிரி பொதுஜனங்கள் நேருக்கு நேர் பார்க்க ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

## காரியக்கமி
## சுற்றுப்பி

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி
தப்பட்ட காரியக்கமிட்டி மெம்ப
சாமி, எஸ். எஸ். பாரதியார்,
கே. எம். பாலசுப்பிரமணியர்,
கள் சுற்றுப்பிரயாண விபரமாவது

| | |
|---|---|
| 9—6—38 | வியாழ |
| 10—6—38 | வெள்ள |
| 11—6—38 | சனி |
| 12—6—38 | ஞாய |
| 13—6—38 | திங்கள் |

குறிப்பு:- மேற்கண்ட கமிட்டி
ஆங்காங்குள்ள தோழர்கள் ஹிந்
வதற்காக முக்கியஸ்தர்கள் கொ
ஏற்படுத்திக்கொள்ளவும் ஹிந்தி
வும் வேண்டுமாய் வேண்

### தேரூர் தமிழ்க் கழக 4-வது ஆண்டு விழா

தேரூர், ஜூன். 7.

திருவள்ளுவர் தமிழ்க்கழக 4-வது ஆண்டு விழா 11-6-38க் தேதி இவ்வூர் வணிகர் தெருவில்

# வேண்டு

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ந
போட்டோ எடுத்த பிளாக் செய்ய
ரேட்டுக்கு (அசலுக்கு) பிளாக் செய்
கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அதுபோலவே படம் பிடிக்கும்
மாத்திரம் பெற்றுக்கொண்டு, படம்பி
மிகவும் உபகாரமாய் இருக்கும். ஆத
கேமராவுடன் வரக்கூடிய தோழர்
கோருகிறோம்.

மானே